# ஏப்ரல்- 27- வெள்ளி

## ஆண்டவரே, எழுந்தருளும்: என் கடவுளே, என்னை மீட்டருளும்: திபா. 3:7

**முதல் வாசகம் : திருத்தூதர் பணி13: 26 – 33**

அந்நாட்களில் பவுல் பிசிதியாலிலுள்ள அந்தியோக்கியாவிற்கு வந்தபோது அவர் தொழுகைக்கூடத்தில் கூறியதாவது: “சகோதரரே, ஆபிரகாமின் வழிவந்த மக்களே, இங்கு இருப்போருள் கடவுளுக்கு அஞ்சி நடப்போரே, இந்த மீட்புச் செய்தி நமக்குத்தான் அனுப்பப்பட்டுள்ளது.எருசலேமில் குடியிருக்கும் மக்களும் அவர்களுடைய தலைவர்களும் அம்மீட்பரை அறியவில்லை ஓய்வுநாள்தோறும் வாசிக்கப்படும் இறைவாக்கினரின் வார்த்தைகளைக் கேட்டும் அவற்றைப் புரிந்து கொள்ளவில்லை ஆயினும் அவருக்கு அவர்கள் தீர்ப்பளித்தபோது அவ்வார்த்தைகள் நிறைவேறின.சாவுக்குரிய காரணம் எதுவும் அவரிடம் இல்லாதிருந்தும், அவரைக் கொல்ல அவர்கள் பிலாத்திடம் கேட்டார்கள்.மறைநூலில் அவரைப்பற்றி எழுதியுள்ள அனைத்தையும் அவர்கள் செய்து முடித்தார்கள். பின்பு அவரைச் சிலுவையிலிருந்து இறக்கிக் கல்லறையில் வைத்தார்கள்.ஆனால் இறந்த அவரைக் கடவுள் உயிரோடு எழுப்பினார்.அவர் கலிலேயாவிலிருந்து தம்முடன் எருசலேம் வந்தவர்களுக்குப் பல நாள்கள்தோன்றினார். அவர்கள் இப்போது அவர்தம் சாட்சிகளாக மக்கள் முன் விளங்குகின்றார்கள்.இயேசுவைக் கடவுள் உயிர்த்தெழச் செய்ததன் வழியாக மூதாதையருக்கு அளித்த வாக்குறுதியை அவர்கள் பிள்ளைகளாகிய நமக்கென நிறைவேற்றினார். இதுவே நாங்கள் உங்களுக்கு அறிவிக்கும் நற்செய்தி.இதுபற்றி இரண்டாம் திருப்பாடலில், ”நீரே என் மகன், இன்று நான் உம்மை ஈன்றெடுத்தேன்” என்று எழுதப்பட்டுள்ளது“

**பதில்பாடல் :** நீரே என் மைந்தர் இன்று உம்மைப் பெற்றெடுத்தேன்.

**நற்செய்தி : யோவான்14: 1 – 6**

அக்காலத்தில் இயேசு தம் சீடரை நோக்கிக் கூறியதாவது:, ”நீங்கள் உள்ளம் கலங்க வேண்டாம். கடவுளிடம் நம்பிக்கை கொள்ளுங்கள். என்னிடமும் நம்பிக்கை கொள்ளுங்கள்.தந்தை வாழும் இடத்தில் உறைவிடங்கள் பல உள்ளன. அப்படி இல்லையெனில், ”உங்களுக்கு இடம் ஏற்பாடு செய்யப்போகிறேன்” என்று சொல்லியிருப்பேனா?நான் போய் உங்களுக்கு இடம் ஏற்பாடு செய்தபின் திரும்பிவந்து உங்களை என்னிடம் அழைத்துக்கொள்வேன். அப்போது நான் இருக்கும் இடத்திலேயே நீங்களும் இருப்பீர்கள்.நான் போகுமிடத்துக்கு வழி உங்களுக்குத் தெரியும்” என்றார்.தோமா அவரிடம், ”ஆண்டவரே, நீர் எங்கே போகிறீர் என்றே எங்களுக்குத் தெரியாது. அப்படியிருக்க நீர் போகுமிடத்துக்கான வழியை நாங்கள் எப்படித் தெரிந்து கொள்ள இயலும்?” என்றார்.இயேசு அவரிடம், ”வழியும் உண்மையும் வாழ்வும் நானே. என் வழியாய் அன்றி எவரும் தந்தையிடம் வருவதில்லை“ என்றார்.

**தியானம் :** இன்றைய நற்செய்தியில் “நீங்கள் உள்ளம் கலங்க வேண்டாம் கடவுளிடம் நம்பிக்கை கொள்ளுங்கள்.என்னிடமும் நம்பிக்கை கொள்ளுங்கள்.என்று எமக்கு அழைப்பு விடுகின்றார். ”மனிதரில் நம்பிக்கை வைப்பவர் சபிக்கப்படுவர் ஆண்டவரில் நம்பிக்கை வைப்பவர் எப்போதும் கனி கொடுப்பர் (எரே17:5-8)ஏனெனில் இறைவனை தேடுவோர் மட்டும் வாழ முடியும் (ஆமோஸ் 5:4) உறவுகளால், புகழ்ச்சியால், துன்பத்தால் தன் சார்ந்த வாழ்க்கை முறையினால் வாழ்வில் சலிப்பு ஏற்படும் போது, தாங்குவது இறைவனின் கரங்கள் மட்டுமே. இறைவனின் கரங்களை நாம் சார்ந்திருந்தால் பற்றிப்பிடித்துக் கொண்டால், நம் கரங்களை இறைவன் விட மாட்டார். ஏனெனில் விசுவாசமானவர் நம்பிக்கைக்குரியவர் நம் இறைவன்( 1கொரி1:9) இன்றைய உலகில் சோகத்தின் உச்சம் இறைவனை விட்டு மனிதன் வெளியேறுவது நாம் கண்ணால் காண்கின்ற, நமக்குபிடித்தமான அனைத்தையும் அடைந்த பின ”வெறுமை“ எனும் சூழ் நிலை நம்முடைய வாழ்க்கையில் ஒட்டிக்கொள்கிறது. கடவுளை நாம் நம்பி வாழும் போது நமக்கு எதிராக எதுவும் (யாரும் நிற்க முடியாது உரோ8:3) கடவுள் நம்மோடு இருந்தால் நாம் எதற்கும் அஞ்சத்தேவையில்லை. இறைவா உம்மைச்சார்ந்து என் வாழ்க்கையில் பயணிக்கின்றேன். இறைவா எங்கே நீயோ அங்கே நானும் என்பதே நம் செபமாகட்டும் நம் வாழ்வாகட்டும்.